16.12.2019 எவர்வின் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி நேரம்: 2.30 மணி
வகுப்பு: 9 அரையாண்டு பொதுத் தேர்வு மதிப்பெண்: 100

தமிழ்

பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 14x1=14

1. காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! – எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே ! ...........
- இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்

அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை
ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
இ) மோனை, எதுகை, இயைபு
ஈ) மோனை, முரண், அந்தாதி

2. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தா மணி -
அடிக்கோடிட்ட இலக்கணக் குறிப்பு ________.

அ) வேற்றுமைத் தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

3. "மிசை" - என்பதன் எதிர்ச்சொல் _______.

அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

4. தமிழர்களின் வீர விளையாட்டுகளுள் ஒன்று ________.

அ) கிட்டிப்புள் ஆ) ஏறுதழுவுதல் இ) மட்டைப்பந்து ஈ) கூடைப்பந்து

5. மணிமேகலை எழுதியவர் _______.

அ) இளங்கோவடிகள் ஆ) சீத்தலைச் சாத்தனார்
இ) திருத்தக்கதேவர் ஈ) ஒட்டக்கூத்தர்

6. விகாரப் புணர்ச்சி ______ வகைப்படும்.

அ) நான்கு ஆ) ஆறு இ) மூன்று ஈ) இரண்டு

7. திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல் _______.

அ) நான்மணிமாலை ஆ) இரட்டைமணிமாலை
இ) திருவள்ளுவமாலை ஈ) சூடாமணிமாலை

8. முதன் முதலாக _______ மூலம் தொடர்பு கொண்டபோது உலகம் சுருங்கி விட்டது.

அ) கடிதம் ஆ) மின்னஞ்சல் இ) கணினி ஈ) தொலைபேசி

9. பின்வரும் தொடர்களைப் படித்து 'நான் யார்' என்று கண்டுபிடிக்க.
அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன்.
எல்லாக் கோளிலும் ஏற்றப்படுவேன்; இளையவர்
கூட்டம் என்னை ஏந்தி நடப்பர் _________.

அ) இணையம் ஆ) தமிழ் இ) கணினி ஈ) ஏவுகணை

10. ஒன்றறி வதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே -
இவ்வடிகளில் 'அதனொடு' என்பது எதனைக் குறிக்கிறது?

அ) நுகர்தல் ஆ) தொடுஉணர்வு இ) கேட்டல் ஈ) காணல்

11. குடும்ப விளக்கு _____ நூல்களுள் ஒன்று.

அ) பாரதியார் ஆ) கவிமணி இ) பாரதிதாசன் ஈ) ஔவையார்

12. சிறுபஞ்ச மூலம் என்பது ______.

அ) காப்பிய இலக்கியம் ஆ) சங்க இலக்கியம்
இ) அற இலக்கியம் ஈ) தற்கால இலக்கியம்

13. பகுபத உறுப்புகள் ________ வகைப்படும்.

அ) ஆறு ஆ) ஐந்து இ) மூன்று ஈ) நான்கு

14. பல்லவர் காலச் சிற்பக் கலைக்குச் சிறந்த சான்று _______.

அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார் பட்டி
இ) திரிபுவன வீரேசுவரம் ஈ) தாடிக் கொம்பு

பகுதி - II (மதிப்பெண்கள் 18)

பிரிவு - I

II. எவையேனும் நான்கனுக்கு குறுகிய விடையளிக்க: 4x2=8
(வினா எண்.21 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)

15. தமிழோவியம் கவிதையில் உன்னை மிகவும் கவர்ந்த அடிகள் இரண்டனை எழுதுக.

16. உன் பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்கள் எவையேனும் நான்கனை எழுதுக.

17. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' - குறிப்பு வரைக.

18. ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?

19. பொருத்துக:

அ) மூன்றறிவு - வண்டு

ஆ) நான்கறிவு - மனிதன்

இ) ஐந்தறிவு - எறும்பு

ஈ) ஆறறிவு - விலங்கு

20. தமிழின் பொற்காலம் எது? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?

21. 'மிகுதியான்...' எனத் தொடங்கும் திருக்குறளை அடிமாறாமல் எழுதுக.

பிரிவு - 2

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக. 5x2=10
(வினா எண்: 28-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)

22. பொருத்தமான பெயரடைகளை எடுத்து எழுதுக.

(நல்ல, பெரிய, இனிய, கொடிய)

அ) எல்லோருக்கும் _______ வணக்கம்.

ஆ) _______ ஓவியமாக வரைந்து வா.

23. தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.

அ) இளமையில் கல்வி _______.

ஆ) கற்றோர்க்குச் சென்ற ________.

24. அ) வல்லினம் மிகும் இடம் ஒன்றைச் சான்றுடன் எழுதுக.

ஆ) வல்லினம் மிகா இடத்தைச் சான்றுடன் எழுதுக.

25. தொடர் தரும் பொருள் எழுதுக.

அ) சின்னக்கொடி ஆ) சின்னகொடி

26. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

அ) நேற்று தென்றல் காற்று அடித்தது.

ஆ) அணில் பழம் சாப்பிட்டது.

27. அ) சூறாவளியின் போது மேல் மாடியில் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் தப்பிப்பான். (பிழை நீக்கி எழுதுக)

ஆ) திருக்குறளை எழுதியவர் யார் (நிறுத்தற் குறியிடுக)

28. கொள்வார் - பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.

பகுதி - III

பிரிவு - I (மதிப்பெண்கள் 18)

IV. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடையளி:
(36 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்) 2x3=6

29. முழு உருவச் சிற்பங்கள் - புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

30. புணர்ச்சி விதி அறிந்து சேர்த்து எழுதுக.

அ) தமிழ் + பேசு ஆ) தமிழ் + பேச்சு ஆ) கை + கள்

31. சமைப்பது தாழ்வா? இன்பம் சமைக்கின்றார் சமையல் செய்வார்.

அ) இன்பம் சமைப்பவர் யார்?

ஆ) பாவேந்தரின் கூற்றுப்படி சமைப்பது தாழ்வா?

32. பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

தமிழ்மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல் தொல்காப்பியம், இந்நூல் எழுத்து, சொல், பொருள், என மூன்று அதிகாரங்களையும் 27 இயல்களையும் கொண்டுள்ளது. தமிழில் அகம், புறம் சார்ந்த வாழ்வியல் நெறிகளை விளக்குகிறது. பல அறிவியல் கருத்துகள் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர்.

வினாக்கள்:

1. தமிழ் மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல் எது?
2. தொல்காப்பியம் எத்தனை அதிகாரங்களையும் எத்தனை இயல்களையும் கொண்டது?
3. தொல்காப்பியம் எத்தகைய வாழ்வியல் நெறிகளை விளக்குகிறது?

பிரிவு - 2

V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: 2x3=6

33. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.

34. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற திருவிழாக் காட்சிகளை மூன்று வரிகளில் எழுதுக.

35. மாட்டுப் பொங்கல் - விளக்குக.

36. "காடெல்லாம்..." எனத் தொடங்கும் பெரியபுராணம் பாடலை அடிமாறாமல் எழுதுக.

(அல்லது)

நீர் இன்று அமையா ...... எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிமாறாமல் எழுதுக.

பிரிவு - 3

VI. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: 2x3=6

37. இறந்தகால, நிகழ்கால, எதிர்கால இடைநிலைகளை விளக்கி எழுதுக.

38. சொற்பொருள் பின்வரு நிலையணியை விளக்குக.

39. அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
(ஐந்து சால்பு) ஊன்றிய தூண் - இக்குறட்பாவில் பயின்று வந்த அணியை விளக்குக.

40. உவமையணியை விளக்குக.

பகுதி - 4 (மதிப்பெண்கள் 20)

VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 5x4=20

41. படம் பார்த்து கவினுற எழுதுக.



42. பெற்றோர் மனம்  மகிழுமாறு நீ செய்ய வேண்டியவற்றை நான்கு வரிகளில் எழுதுக.

43. சொற்களை இணைத்து நான்கு தொடர்களை எழுதுக.
படம் வரைந்தான்.

44. போக்குவரத்து விதிகள் எவையேனும் நான்கனை எழுதுக.

45. மொழிபெயர்க்க:

i) Union is strength  ii) Walk like a bull
iii) Thinking is great  iv) Practice what you have learnt.

VIII. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளி: 5x6=30

46. அ) 'தூது அனுப்பத் தமிழே சிறந்தது' - தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.

47. அ) நீரின்று அமையாது உலகு - என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை விளக்குக.

(அல்லது)

ஆ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

48. அ) இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை எழுதுக.

(அல்லது)

ஆ) நூலகம், நூல்கள் குறித்து அண்ணாவின் உரைப்பேச்சுக் கருத்துகளை எழுதுக.

49. உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

(அல்லது)

உன் பகுதியில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றக் கோரி மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

50. முன்னுரை - கணினி வகைகள் - கணினிப் பயன்பாடு - காலத்தை வெல்லும் கணினி தலைப்பில் கட்டுரை வரைக.

(அல்லது)

உன் ஊரில் நடைபெற்ற திருவிழா குறித்து பத்து வரிகள் எழுதுக.